# பத்திரிக்கைச் செய்தி

சேலம் மாவட்டத்தில் குடும்பம் மற்றும் பொது இடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு தேவைப்படும் அவசரகால மீட்பு, மருத்துவ உதவி, மனநல ஆலோசனை, காவல் உதவி, சட்ட உதவி, தற்காலிக தங்குமிடம் ஆகியவற்றை வழங்கி அவர்களை பாதுகாக்க மத்திய அரசினால் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையம் ஆகஸ்டு 2018 முதல் சேலம் மாவட்டத்திலும் பிப்ரவரி 2024 முதல் ஆத்தூர் வட்டாரத்திலும் மொத்தமாக சேலம் மாவட்டத்தில் 2 மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது சேலம் மாவட்டத்தில் உள்ள 2 சகி பெண்கள் ஒருங்கிணைந்த சேவை மையத்திலும் உள்ள காலி பணியிடங்களை நிரப்புதல் பொருட்டு கீழ்க்கண்ட நிலைகளில் ஒப்பந்த பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இப்பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பிக்க விருப்பமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுய விபரங்களை 26.06.2024 அன்று மாலை 05.00 மணிக்குள் மாவட்ட சமூக நல அலுவலகம் மாவட்ட ஆட்சியர் வளாகம், அறை எண் 126 என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு 0427-2413213 என்ற மாவட்ட சமூக நல அலுவலக தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

முகவரி:

மாவட்ட சமூக நல அலுவலர்,<br>
மாவட்ட சமூக நல அலுவலகம்,<br>
அறை எண்.126, முதல் தளம்,<br>
மாவட்ட ஆட்சியரகம்,<br>
சேலம் – 636001.<br>
0427-2413213

**1.மைய நிருவாகி பணியிடம் :** 1 (Centre Administrator )

**தொகுப்பூதியம்** : ரூ. 35,000/-

**கல்வித் தகுதி** : **MSW/Counselling Psychology**
சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் முதுகலைப்பட்டம்

**வயது வரம்பு** : 27 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**பணியிடம்** : **ஆத்தூர்**

**முன் அனுபவம் :**

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு / தனியார் நிறுவனங்களில் உளவியல் ஆலோசகராக 4 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்
- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

**2.முதன்மை ஆலோசகர் பணியிடம் :** 1 (Senior Counsellor)

**தொகுப்பூதியம்** : ரூ. 22,000/-

**கல்வித் தகுதி** : **MSW/Counselling Psychology**
சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் முதுகலைப்பட்டம்

**வயது வரம்பு** : 25 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**பணியிடம்** : **ஆத்தூர்**

**முன் அனுபவம் :**

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு / தனியார் நிறுவனங்களில் உளவியல் ஆலோசகராக 2 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்
- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்.

**3.வழக்குப் பணியாளர் பணியிடம் : 8 (Case Worker )**

**தொகுப்பூதியம்** : **ரூ. 18,000/-**

**கல்வித் தகுதி** : **BSW / MSW /Counselling Psychology**
சமூகப்பணி மற்றும் உளவியல் பாடப்பிரிவில் இளங்கலை / முதுகலைப்பட்டம்

**வயது வரம்பு** : 23 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**பணியிடம்** : **சேலம் = 4 காலிபணியிடங்கள் ஆத்தூர் = 4 காலிபணியிடங்கள்**

**முன் அனுபவம் :**

- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் அரசு / தனியார் நிறுவனங்களில் உளவியல் ஆலோசகராக 2 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்
- பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். 24 மணி நேரமும் சேவை அளிக்கும் வகையில் சுழற்சி முறையில் பணியமர்த்தப்படும்